Title of PDF Document

This is the subtitle of PDF, Use long text here.

சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை - 08.

ஓ.மு.எண். 009115/அ3/2023, நாள். 30.01.2024.

| | | |
|---|---|---|
| பொருள் | | பள்ளிக் கல்வி - தேசிய ஆசிரியர் நல நிதி - தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி - பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கல்விச்செலவு 2023 - 2024 ஆம் கல்வியாண்டு முதல் ரூ. 50,000/- மற்றும் பட்டயப் படிப்பிற்கு ரூ. 15,000/- வரை கல்வி கட்டணத் தொகை (Tutuion fee) உயர்த்தி வழங்க அரசாணை பெறப்பட்டது - தொடர்பாக சுற்றறிக்கை அனுப்புதல் - சார்பு. |
| பார்வை | 1 | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின் கீழ் செய்தி வெளியீடு எண். 408, நாள். 01.03.2023. |
| | 2 | அரசுக் கடிதம் எண்.3795/வ.செ-2023 - 1, நாள்.27.03.2023 |
| | 3 | அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக் கல்வி (பக5(2) த் துறை நாள்.03.10.2023 |
| | 4 | சென்னை - 06, பள்ளிக்க கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.064404/ஐஇ1/2023, நாள். 17.11.2023. |

..................

பார்வை 3 - ல் காணும் அரசாணையில் தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து ஏற்கனவே 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வந்த தொழிற்கல்வி பயில, கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர்கல்வி கட்டணத் தொகை (Tutuion fee) தொழிற்கல்வி பட்டப்படிப்பு ரூ. 10,000/ம் மற்றும் பட்டயப்படிப்பிற்கு ரூ. 5,000/ நிதியுதவியை உயர்த்தி கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர்கல்வி கட்டணத் தொகை (Tutuion fee) அல்லது ரூ. 50,000/- இதில் எது குறைவோ, அத்தொகை மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் கல்வி கட்டணத் தொகை (Tutuion fee) அல்லது ரூ. 15,000/ இதில் எது குறைபோ அத்தொகை தேசிய ஆசிரியர் நல நிதியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து மட்டுமே உயர்கல்விக் கட்டணத் தொகையை வழங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3. பார்வை 3 - ல் கண்ட அரசாணையில் இணைப்பு (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தானைகளின் அடிப்படையிலும் மாநில தேர்வுக்குழு தெரிவு செய்யும் தகுதியுள்ள ஆசிரியர்களின் உயர் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி கட்டணத் தொகை (Tutuion fee) வழங்க அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் அரசாணை நகலினை உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு இத்துடன் இணைத்து அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது. மேலும், பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் அரசாணையினை தங்கள் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்து, தகவல் தெரிவிக்கப்பட்டமைக்கான ஒப்புதல் பெற்று தங்கள் அலுவலக கோப்பில் பராமரித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

1. அரசாணை நகல்

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

30.1.24

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை - 08.

பெறுநர்

அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகள், சென்னை மாவட்டம்.